ISSN:2582-9599



# திருக்குறள் கூறும் மனையாளின் மாண்புகள்

முனைவர்.சு.இராஜலெட்சுமி, உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி,
தூத்துக்குடி.

27

ஆய்வு நோக்கம்

காலம் காட்டும் கண்ணாடி இலக்கியங்கள். மக்கள் சிறப்பாக வாழ்வதற்கு வழிகாட்டியாக விளங்கும் அறநூல்களுள் திருக்குறளும் ஒன்றாகும். மனிதர்கள் அன்போடும், மனிதத் தன்மையோடும், நடந்து கொள்பவர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைவார்கள். இன்றைய குழந்தைகளால் நாளைய வரலாறு எழுதப்படுகிறது. குடும்பத்தையும், குழந்தைகளையும், சமுதாயத்தையும் சீர்படுத்தும் முக்கியப்பங்கு பெண்களுக்கே உரியது. வள்ளுவப் பெருந்தகை கூறும் மனையாளின் மாண்புகளைக் கூறுவதே ஆய்வின் நோக்கமாக அமைகிறது.

ஆய்வுச் சுருக்கம்

இல்லறமே நல்லறமாக அமையும். இல்லறத்தில் இருந்தே பெண் தன் கடமைகளை திறம்பட செயலாற்றுகிறாள். மனைவியாக, தாயாக நல்ல மனிதநேயமிக்கவளாக செயல்படுகிறாள் என்னும் கருத்து ஆய்வுச் சுருக்கமாகும்.

திறவுச்சொற்கள்

மதிப்பு தரும் கல்வி - இல்லறமே நல்லறம் - பீடுநடை பெற்றான் - கற்பு – அமிழ்தினும் இனிய மக்கள் - விருந்தோம்பல்.

முன்னுரை

தமிழ்மொழி இலக்கிய, இலக்கண வளம் நிறைந்தது. தமிழ்மொழியின் தன்னிகரற்ற அடையாளம் அதன் இலக்கிய வளம் என்று கூறலாம். திருக்குறள் ஒரு சிறந்த வாழ்க்கைப் பெட்டகம். ஒரு சமுதாயம் அறிவுடையதாகவும், ஆற்றல் கொண்டதாகவும், அமைய வேண்டுமெனில் அக்குடும்பத்தை வழி நடத்திக் காக்கும் பெண் சிறந்த பண்புகளுடன் இருப்பது அவசியம். வள்ளுவர் காட்டும் மனையாளின் மாண்புகளைத் தொகுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மதிப்பு தரும் கல்வி

'கற்றது கையளவு கல்லாதது உலகளவு' என்பர் பெரியோர். கல்விச் செல்வம் அழிவில்லாத நிறைவை மனிதனுக்குத் தருவதாகும். கல்விச் செல்வமே மனிதனின் உண்மையான அறிவின் உயரத்தையும், அகன்ற விசாலமான பரந்து பட்ட எண்ண மேன்மையையும் தரும். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார் 'ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அது தாண்டா வளர்ச்சி' (த.இ.வ, த-321) என்று குறிப்பிடுவார்.

கல்வி வளர்ச்சி மனிதனின் அறியாமை இருளை விலக்கி அறிவுச்சுடரை கொடுக்க வல்லது. வேற்றுமைகளைக் களைந்து மனித உயர்வுக்கு வழிகாட்டியாக அமைவதே கல்வி. இதையே,

“கல்வி கரையில கற்பவர் நாள் சில்

மெல்ல நினைக்கின் பிணிபல் - தௌ;ளிதின்

ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்

பாலுண் குருகின் தெரிந்து” (நாலடி,பா.எண் 135) என்கிறது நாலடியார்.

வள்ளுவர்,

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு” (கு.எ.392) என்கிறார், எண்ணும் எழுத்தும் மனிதனின் இரண்டு கண்கள் போன்றது என்கிறார்.

“கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையவர் கல்லா தவர்” (கு.எ.393) என்கிறார்.

கல்வியை மனிதனின் கண்களுக்கு ஒப்பாக பதிவு செய்கிறார் வள்ளுவர். உலகில் வாழும் உயிர்கள் அனைத்திற்கும் மிகவும் இன்றியமையாது வேண்டப்படுவது கண்கள். இருப்பினும் கற்றவர் முகத்தில் இருப்பவை மட்டுமே கண்கள் என்றும், மற்றவை முகத்தில் உள்ள புண்கள் என்கிறார்.

“விலங்கொடு மக்களனையர் இலங்குநூல்

கற்றாரோ டேனையவர்” (கு.எ.410) என்ற வள்ளுவரின்

கருத்துப்படி கல்வி கற்காத மக்கள் விலங்குக்கு ஒப்பாவர்கள் என்கிறார். உலகில் சரிபாதியாக விளங்கும் பெண்களும் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கமே தெய்வப் புலவரின் நோக்கம், கல்வி கற்ற பெண்களால், நாளைய சிறந்த கல்வி அறிவுடைய தலைமுறையை உருவாக்க முடியும். இக்கருத்தையே குடும்ப விளக்கில் பாரதிதாசனும் கற்ற பெண்ணின் குடும்பம் பல்கலைக்கழகமாக மிளிரும் என்கிறார். ‘ஆணாய் பிறப்பது அருமை, பெண்ணாய்ப் பிறப்பது எருமை’ என்று பேசித் திரிந்த காலத்தில்,

“பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான். புவி

பேணி வளர்த்திடும் ஈசன்” (பாரதியார் கவிதைகள்,ப-210)

என்கிறார் பாரதியார். பெண்கள் கல்வி கற்று, அறிவில் சிறந்து, தனது இல்லறக் கடமைகளை நிறைவாகச் செய்து புகழ்பெற வேண்டும். புதுமையான சமுதாயம் பொலிந்திட பெண்கல்வி அவசியம் தேவைப்படுகிறது.

இல்லறமே நல்லறம் :-

அன்போடு பொருந்தியது தான் மனித வாழ்க்கை. மனித வளர்ச்சியின் முக்கியக்கூறு ஒற்றுமை நிறைந்த குடும்பம். குடும்பம் சிறப்புற அமைய மனையாள் அவசியம். அன்பு நிறை மனையாள் அமைந்து விட்டால் இல்லறம் நல்லறமாகும். கணவனும் மனைவியும் பொருந்திய அன்புடன் கூடி வாழ்கின்ற வாழ்க்கையே இல்லறமாகும். இல்லறத்தில் இருந்தே அறச்செயல்கள் தொடங்குவதால் இல்லறம் என்பது அறத்தின் முதல்நிலையாக உள்ளது. இல்லத்தில் இல்லாளின் பங்கு

அளவிடற்கரியது, இன்றியமையாதது. குடும்பத்தலைவி அன்பும், பண்பும் நிறைந்த வளாக இருந்தால் குடும்பம் சிறக்கும் என்பதை முதற்பாவலர்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (கு.எ – 45) என்கிறார்.

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" (கு.எ – 51)

என்ற முப்பால் மொழியானது வாழ்க்கைத்துணையானவள் குடும்பப் பண்பு நிறைந்தவளாகவும் கணவனின் வருவாய்க் கேற்ப வாழ்பவளாகவும் இருக்க வேண்டும் என்கிறது. தன்னையும், தன் கணவனையும் அவனது புகழையும் இல்லத்தின் மாண்பையும், நாடி வரும் உறவுகளையும் போற்றிப் பாதுகாத்து சுறு சுறுப்பாக இருப்பவளே மனைவி.

பீடு நடைபெற்றான் :-

இல்லறத்தில் வாழக்கூடிய ஆண் எப்பேர்பட்ட செல்வங்களையும், வளங்களையும், சிறப்புகளையும் புகழையும் பெற்றவனாக இருந்தாலும், அவன்பெற்ற மனைவியின் சிறப்பால் தான் ஆண்மகன் (கணவன்) சிறப்பான். பிறரை நெறிப்படுத்தித் தானும் நெறி நிற்கும் இல்வாழ்வே தவத்தினும் ஆற்றல் உடையது. இக்கருத்தை ஒட்டியே திருவள்ளுவரும்

"இல்லதென் இல்லவன் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை" (கு.எ – 53)

என்கிறார். தலைவனின் நெஞ்சும் நிமிர்த்தி, காளை போன்ற பீடு நடையை அவனது மனைவியின் நற்பண்புகளால் மட்டுமே பெற முடியும். கணவனது நிறைந்த முழுமையான அன்பினைப் பெறும் மனைவியர் இவ்வுலகில் மட்டுமல்ல மேலுலகிலும் பெருஞ்சிறப்பு பெறுவார்கள்.

கற்பு :-

கற்பு என்ற சொல் 'கல்' என்ற வேர்ச்சொல்லில் இருந்து பிறந்தது.

கற்பு என்பது ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்டு இணைந்து வாழும் வாழ்க்கை நெறியைக் கற்பு என்கிறோம். திருமணத்திற்குப் பின் அமைந்த இல்வாழ்க்கை கற்பு எனப்பட்டது. தமிழ்ச்சமூகத்தின் பண்டைக் காலத்தில் கற்பு நெறியில் சிறந்து விளங்கியவர்கள் தெய்வ நிலையைப் பெற்றுள்ளனர். மன உறுதியுடையவளாக மனைவி இருப்பதை விட ஒருவன் பெறக்கூடியது வேறு எதுவுமில்லை. அதுவே கற்பு என்பதை,

"சிறைகாக்கும் காப்பெண் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" (கு.எ.57) என்கிறார், செந்நாப்போதார். கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய பொதுவான நல்லொழுக்கம், கற்பு நெறியைப் பின்பற்றி வாழ்தலே ஆணுக்கும் பெண்ணுக்கும் பெருமை.

"கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

(பாரதி.கவி.ப-231) என்கிறார், பாரதியார். ஒரு பெண்ணிடம் கற்பு என்னும் உறுதிப்பாடு இருக்குமானால் இதைவிட உலகில் உயர்வானது எதுவுமில்லை என்பதை

“பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மை உண்டாகப் பெறின்” (கு.எ – 54)

என்கிறார் பொய்யில் புலவர்,

குடும்பத் தலைவியானவள் தெய்வத்தை வணங்காது இருந்தாலும், தன்னுடைய கணவனைத் தெய்வமாகப் போற்றி வணங்கினால் பெறும் பேறு கிட்டும் என்பதை,

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்எனப் பெய்யும் மழை (கு.எ -55) என்கிறார், திருவள்ளுவர். அவள் பெய் என்றால் மழை பெய்யும் அளவிற்கு சிறப்பு பெறுவாள்.

அமிழ்தினும் இனிய மக்கள் :-

இல்லறக் கடமைகளில் பெண்ணுக்கு முக்கியமானதாக கருதப்படுவது மக்கட்பேறு, நாம் பெறக்கூடிய செல்வங்களில் எல்லாம் தலையாயது குழந்தைச் செல்வம். அச்செல்வம், பெண்ணை மனைவி என்ற நிலையில் இருந்து தாய் என்னும் பெருநிலையினைத் தருகிறது. இதையே,

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு” (கு.எ – 60)

என்கிறார் வள்ளுவர். அறிவுடைய, பண்புடைய மக்களைப் பெறுதல் என்பதே அனைத்து மக்களின் ஆசை. அறிவுடைய குழந்தைச் செல்வத்தைத் தவிரப் பிற செல்வங்களை யாரும் மதிப்பதில்லை. குழந்தைகள் பெற்றோரின் நல்வினையால் கிடைக்கப்பெறும் பெரும்பேறு, நற்பண்புடைய மக்களைப் பெற்றிருந்தால், ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும், துன்பங்கள் அணுகாது என்கிறார் வள்ளுவர்.

விருந்தோம்பல்:-

விருந்து ு ஓம்பல் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். விருந்து என்ற சொல்லிற்கு புதுமை என்றும் ஓம்பல் என்ற சொல்லிற்கு பாதுகாத்தல் என்றும் அகராதி பொருள் கூறுகிறது. விருந்தோம்பல் என்பது இல்லறக் கடமைகளில் முதன்மையானதாக கருதப்படுகிறது. விவசாயத்தை தொழிலாக கொண்டதால் விருந்து என்பது தோன்றியது. உயிர் காக்கும் மருந்தாக இருப்பினும் விருந்துடன் பகிர்ந்து கொள்வதே சிறப்பானது. விருந்தை எதிர்பார்ப்பவர் வறுமைக்கு ஆட்பட மாட்டார்கள். வேள்வியை விட சிறந்த விருந்தோம்;பல் மென்மையானது’ என்று திரு. சிவயோகி சிவக்குமார் விருந்தோம்பல் என்ற அதிகாரத்திற்கு விளக்கம் தருகிறார். உறவினர் மட்டுமின்றி அறிமுகம் இல்லாதோரையும், இன்முகத்தோடு வரவேற்பதும் உபசரிப்பதும், வழியனுப்பும் முறையும் தான் விருந்தோம்பலில் முக்கியத்துவம் பெறுகிறது. விருந்தினரை வாசலில் நின்று நன்கு முகம் மலர்ந்து வரவேற்க வேண்டும். நாம் வரவேற்கும் முறையிலேயே நாம் விருந்தினர் மீது வைத்திருக்கும் அன்பு வெளிப்படும் தொட்டு மோந்து பார்த்த அளவில் அனிச்சப்பூ வாடி விடும். அதுபோல நம் முகம்

வேறுபட்டுப் பார்த்தால் (உபசரித்தால்) விருந்தினர் வாடி விடுவர், அக்காலத்தில் வீடுகளில் திண்ணை என்ற அமைப்பு இருந்தது. வரும் விருந்தினரை எதிர்பார்த்து உணவு உண்ணும் பழக்கம், பழங்காலத்தில் இருந்தது. விருந்தினரை உபசரித்து வாழும் இல்லத்தில் திருமகள் வாழ்வாள் என்பதை,

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்" (கு.எ – 84)

என்கிறார் திருவள்ளுவர்,

பொருநராற்றுப்படையில் கரிகாலன் என்ற அரசன் தன்னை நாடி வந்த புலவர்களுக்கு, நல்ல விருந்தும் கொடுத்து, தேவையான பொருளும் கொடுத்து தானே ஏழடி உடன் சென்று வழி அனுப்புகிறான். இதனை,

"பால்புரை புரவி நால்குடன் பூட்டி
காலின் ஏழ், அடிப் பின்சென்று" (பொருந 165, 166)

என்கிறது பொருநராற்றுப்படை.

இதனையே வள்ளுவரும்,

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" (கு.எ – 86)

என்கிறார். வந்த விருந்தினரை வழியனுப்பி விட்டு, அடுத்த விருந்தினரின் வருகைக்காக எதிர்பார்த்து காத்திருப்பவர்கள் வானுலகத்தேவர்க்கும் நல்ல விருந்தினர் என்கிறார் வள்ளுவர்.

முடிவுரை :-

ஆறுகளின் சங்கமம் கடலில், மனித உயிரின் தொடக்கம் பெண்ணில் உயிர்களின் வளர்ச்சிக்கு காரணம் பெண்ணே ஆவாள். இவ்வுலக வளர்ச்சிக்கு காரணமாகும் மகளிர் ஒவ்வொரு நிலையிலும் தனது கடமைகளைச் செய்து மேன்மேலும் ஓங்கி வளர வேண்டும்.

துணைநூற்பட்டியல்

1. திருக்குறள் - உரையாசிரியர் புலியூர்க்கேசிகள்
   பூம்புகார், பதிப்பகம், சென்னை – 600 108.
2. தமிழ் இலக்கிய வரலாறு முனைவர் பெ. சுயம்பு
   பாரதிபதிப்பகம், திசையன் விளை – 627 657
3. பதினென்கீழ்க்கணக்கு நூல்கள் - நியூசெஞ்சுரி
   புக் ஹவுஸ் - சென்னை 600 098.
4. பாரதியார் கவிதைகள் சி. சுப்பிரமணியபாரதி
   விகடன் பிரசுரம், சென்னை – 600 002.